**செய்தி வெளியீடு எண்: 461** **நாள்: 02.08.2019**

**செய்தி வெளியீடு**

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாள் ஆண்டுதோறும் அரசின் சார்பில் அனுசரிக்கப்படுகிறது. சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(3.8.2019) காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களை பெருமைப்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அரசு சார்பில் அன்னாரது நினைவு தினம் ஆகஸ்ட் 3ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது.

தீரன் சின்னமலை அவர்கள் ஈரோடு மாவட்டத்தில் உள்ள காங்கேயம் அருகில் மேலப்பாளையம் என்னும் சிற்றூரில் ரத்னசாமி கவுண்டர்– பெரியாத்தா இணையருக்கு மகனாக 17.04.1756 அன்று பிறந்தார். இவரது இயற்பெயர் தீர்த்தகிரி கவுண்டர்.

தீரன் சின்னமலை அவர்கள் இளம் வயதிலேயே மல்யுத்தம், வில் பயிற்சி, வால் பயிற்சி, சிலம்பாட்டம், தடிவரிசை போன்ற பயிற்சிகளைப் பெற்று போர்க்கலையில் சிறந்தவராய் விளங்கினார். அப்போது கொங்குநாட்டை மைசூர் மன்னர் ஆட்சி செய்ததால் கொங்குநாட்டு வரிப்பணம் சங்ககிரி வழியாக மைசூர் அரசிற்குச் சென்றது.

தீர்த்தகிரி அவர்கள் மைசூர் அரசுக்கு கொண்டு செல்லும் வரிப்பணத்தைப் பிடுங்கி ஏழைகளுக்கு விநியோகித்தார். ''நீ யார் ?'' என்று கேட்ட, வரியைக் கொண்டுசெல்லும் தண்டல்காரரிடம், ''சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் இடையில் ஒரு சின்னமலை பறித்ததாகச் சொல்'' என்று சொல்லி அனுப்பினார். அது முதல் தீர்த்தகிரி அவர்களுக்கு "சின்னமலை'' என்ற பெயர் வழங்கலாயிற்று.

தீரன் சின்னமலை அவர்கள் கிழக்கிந்திய கம்பெனிப் படையினர் ஆதிக்கம் செலுத்துவதைத் தடுக்க பல்வேறு கட்டங்களாகப் போர் புரிந்துவந்தார். இடையறாத போர் வாழ்விலும், பல

கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்தார். புலவர் பெருமக்களை ஆதரித்தார். சின்னமலையை ஒழிக்க வேண்டும் என்று ஆங்கிலேயர் முடிவு செய்தனர்.

1801ஆம் ஆண்டு ஈரோடு காவிரிக்கரையிலும், 1802ஆம் ஆண்டு ஓடாநிலையிலும், 1804ஆம் ஆண்டு அறச்சலூரிலும் ஆங்கிலேயர்களுடன் நடைபெற்ற போர்களில் தீரன் சின்னமலை அவர்கள் பெரும் வெற்றி பெற்றார். போரில் தீரன் சின்னமலை அவர்களை வெற்றிபெற முடியாத ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி மூலம், சின்னமலையைக் கைது செய்து சங்ககிரிக் கோட்டைக்கு கொண்டுசென்று போலி விசாரணை நடத்தி 03.08.1805 அன்று தூக்கிலிட்டனர்.

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு நாளை(3.8.2019) காலை 10.00 மணியளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

* * * * *